# தனது குடும்பத்தைப் பலப்படுத்த ஓசியாவுக்கு தேவன் போதித்தார்.

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் பாடம் F2b யை வாசிக்கவும்.

**ஜெபம்:** "கர்த்தாவே, எங்கள் குடும்பங்கள் நீரளித்த பரிசு. ஒரு கிறிஸ்தவக் குடும்பமாக வாழுவதில் உள்ள ஆனந்தத்தை அறிந்து கொள்ள உதவும். உம்மை அறிந்தவர்களாக எங்கள் குழந்தைகளை வளர்க்கவும், ஒருவரை ஒருவர் உண்மையாக நேசிப்பது எப்படி என்று காட்டவும் உதவுவீராக!"

1. **தேவ வார்த்தையைக் கேட்க உங்கள் இருதயத்தை ஆயத்தப்படுத்துங்கள்.**

**ஓசியா அதிகாரம் 3 ல் காண்க.**



- நல்ல, மன்னிக்கும் சுபாவம் உள்ள ஒரு கணவனுக்கு உதாரணம்.
- ஓசியா தன் மனைவி மேல் வைத்த அன்பு எவ்வாறு தேவன் தமது மக்கள் மீது வைத்த அன்புபோல் இருந்தது?

**எந்தப்** பாவங்களுக்காக ஓசியா தன் மனைவியை மன்னித்தான்?

**எபே. 5:21-33ல் காண்க.** கணவர்களுக்கும் மனைவிகளுக்கும் பவுல் தந்த ஆலோசனை.

- ஒருவருக்கொருவர் என்ன செய்ய வேண்டும் என்று எல்லா கிறிஸ்தவர்களுக்கும் வேதாகமம் கூறுகிறது?
- ஒரு மனைவி தன் கணவனை எவ்வாறு நடத்த வேண்டும்?
- தன் மனைவியின் மேல் ஒரு கணவனுக்கு எத்தகைய அன்பு இருக்க வேண்டும்?

**1. சாமு. அதி. 3ல் காண்க:** ஒரு கீழ்ப்படியும் மகன், இரண்டு கீழ்ப்படிதல் இல்லாத மகன்கள் பற்றிய ஓர் உதாரணம்.

- வச. 2-10ல், சிறுபையனான சாமுவேல் எவ்வாறு தேவனுக்கு சேவை செய்தான் என்பதைக் காண்க.
- வச.13ல், ஏலி தன் மகன்களை எவ்வாறு கட்டுப்பாட்டோடு வளர்க்கத் தவறினான் என்பதைக் காண்க.
- வச.14ல் காண்க, தங்கள் மீறுதல்களுக்கு மனம் வருந்த மறுத்த மகன்களுக்கு ஓர் எச்சரிக்கை.

**எபே. 6:1-4ல் காண்க.** குழந்தைகள் தங்கள் பெற்றோருக்கு எவ்வாறு கீழ்ப்படிய வேண்டும் என்பதும், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைக் கர்த்தருக்குள் எவ்வாறு வளர்க்க வேண்டும் என்பதும்.

- வேதாகமக்கதைகளைக் கூறுதல், பாடுதல், ஜெபித்தல், வசனத்தை மனப்பாடம் செய்தல், ஆகியவைகளைத் கூறி செய்யவைக்க குழந்தைகளுடன் தினமும் நேரத்தை செலவிடவும். நன்றாகப் போதித்தால் இளம் வயதிலேயே சாமுவேலைப் போல சிறுவர்கள் தேவனுக்கு சேவை செய்ய ஆரம்பித்து விடுவார்கள்.
- பத்து கற்பனைகளையும், இயேசுவின் கற்பனைகளையும், நீதி மொழிகளையும், புதிய ஏற்பாட்டில் காணப்படும் ஒருவரை ஒருவர் நேசித்தில் பற்றிய நடைமுறை வழிகளையும் அவர்களுக்குப் போதிக்கவும்.
- ஆராதனை வேளையில் சிறுவர்களையும் பங்கு பெறச் செய்யவும். அவர்கள் பாடவும், சிறு நாடகங்களை நடிக்கவும், வசனங்களை ஒப்புவிக்கவும் செய்யலாம்.
- வயதுக்கேற்றபடி எப்போதும் சிறுவர்களைப் பிரிக்க வேண்டாம். பெரிய பிள்ளைகள் சிறியவர்களுக்கு சொல்லித் தரட்டும்.
- சிறுவர்களை கோபத்தால் அல்ல, அன்பால் திருத்த வேண்டும். அவர்களுக்கு மிகவும் கடினமான விதிகளைக் கூறி சலிப்படையச் செய்ய வேண்டாம்.

- பிறருக்கு சேவை செய்யும் சந்தர்ப்பங்களை சிறுவர்களுக்கு அளிக்கவும்.

**2. வரும் வார நடவடிக்கைகளை உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.**

☐ சபையில் உள்ள குடும்பங்களை சந்தித்து தங்கள் குழந்தைளோடு கூட தினசரி ஆராதனை வேளைக்காக திட்டமிட உதவி செய்யவும். தாய் தந்தையர் இருவரையும் இதில் கலந்து கொள்ள ஊக்கப்படுத்தவும்.

☐ சபைத் தலைவர்கள் தங்கள் சொந்த குடும்பத்தோடு ஜெபிக்க நேரம் ஒதுக்குமாறு ஊக்கப்படுத்தவும். தங்கள் குடும்பங்களைப் புறக்கணிக்குமாறு சாத்தான் கிறிஸ்தவ ஊழியர்களை சோதிப்பான். கிறிஸ்தவத் தலைவர்களை பலவீனப்படுத்தி, அவர்களது ஊழியத்தை அழிக்கும் வழிவகைகளை எதிரி எதிர் நோக்குகிறான்.

☐ பிரச்சினைகள் உள்ள குடும்பங்களை சந்தித்து, அவர்களது குடும்பங்களை எவ்வாறு பலப்படுத்துவது என்று ஆலோசனை வழங்கவும். இதோ சில வழிகாட்டுதல்கள்.

1. பிரச்சினை உள்ள குடும்பத்தின் எல்லா ஜனங்கள் கூறுவதையும் கேட்டு அதன் பின்னரே ஆலோசனை கூறவும்.

2. சொல்லப்பட்ட எல்லா விஷயங்களையும் இரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டும். பிறருக்கு எந்த விஷயமும் கூறக்கூடாது.

3. பிலி.2, கொரி.13 போன்ற, ஒருவரை ஒருவர் எவ்வாறு நடத்த வேண்டும் என்று கூறும் வேத வசனங்களை சேர்ந்து வாசிக்கவும்.

4. ஒருவரை ஒருவர் மன்னிக்கத் தேவையான தேவ கிருபைக்காக ஜெபிக்கவும்.

5. ஒருவருக்கு ஒருவர் அன்போடு, நடைமுறையில் சேவை செய்ய வழிகளைக் கண்டறிய குடும்ப உறுப்பினர்களுக்கு உதவவும். குடும்பத் தலைவர் மற்றவர்களுக்கு உதாரணமாகத் திகழ வேண்டும். தியாக உணர்வோடு குடும்பத்துக்கு சேவை செய்வதில், கிறிஸ்துவைப் போன்ற ஊழியர் என்பதின் அர்த்தம் என்ன என்பதை குடும்பத் தலைவராக அவரே முதலில் எடுத்துக் காட்ட வேண்டும்.

**3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்:**

தற்போதைய தேவைக்கும் அப்பகுதி பழக்கவழக்கங்களுக்கும் பொருத்தமான நடவடிக்கைகளை தேர்ந்து கொள்க.

சாமு.1,3 லிருந்து தேவக் குரலை கேட்கும் சிறுவனான சாமுவேலின் கதையைக் கூறலாம் அல்லது நடித்துக் காட்டலாம்.

பகுதி 1 ல் நீங்கள் அறிந்து கொண்டதைக் குறித்து கேள்விகள் கேட்கவும்.

**விளக்கம்:** கணவர்கள் தங்கள் குடும்பத்தை நேசித்து தியாக உணர்வோடு அவர்களுக்கு தொண்டாற்ற வேண்டும் என்று வேதாகமம் கூறுகிறது. தனது உண்மையில்லாத மனைவியையும் அவனது அடிமைத்தனத்தில் இருந்து விடுவித்து அவளை மன்னித்து, தன்னுடன் அமைதியாக வாழ எவ்வாறு கற்றுக் கொடுத்தான் என்பதை ஓசியாவின் கதை எடுத்துக் காட்டுகிறது.

எபே.5:21 - 6:4 ல் கிறிஸ்தவ குடும்பங்களுக்கு பவுலின் ஆலோசனையை வாசிக்கவும்.

- **விளக்குக:** எபே.5,6ல் வேதாகமம் கூறுவது போல பல கலாச்சாரங்களில் மனைவி கணவனுக்கும் குழந்தைக்கும் பணிவிடை செய்து அவர்கள் குடும்பத்துக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற நிலை உள்ளது. ஆனால் கூடவே வேதாகமம் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிய வேண்டும் என்று போதிக்கிறது. ஒவ்வொரு குடும்ப அங்கத்தினரும் ஒருவருக்கொருவர் அன்புடனும் தாழ்மையுடனும் சேவை செய்ய வேண்டும்.

- ஒரு மனைவி கணவனுக்கு மரியாதை கொடுக்கும் போது, தனது குழந்தைகளுக்கு பெற்றோரை கனம் செய்வதையும், கிறிஸ்துவை கனப்படுத்துவதையும் போதிக்கிறாள்.

- கணவனின் அன்பைப் பவுல் கிறிஸ்து தம்மை பின்பற்றுவர்கள் மேல் கொண்டிருக்கும் அன்புக்கு ஈடாக ஒப்பிடுகிறார். கிறிஸ்து தம் உயிரை நமக்காக ஈந்தார். தன் மனைவி மேல் கணவன் வைக்கும் தியாக பூர்வமான அன்பு கிறிஸ்து தமது பிள்ளைகள் மேலும் தம்மைச் சுற்றியிருக்கும் ஒவ்வொருவர் மேலும் வைக்கும் தியாக அன்பிற்கு ஒர் உதாரணமாகும்.
- யோபு 1:5 ஐ வாசித்து **கர்த்தரின் பந்தி**யை ஆசரிக்கவும். ஒரு நல்ல தந்தையாகிய யோபு தனது குழந்தைகளுக்காக தியாகங்களை செய்தான். கர்த்தரின் பந்தியில் பங்கு கொள்ளும் போது நமது பரலோகத் தந்தை மாபெரும் தியாகத்தை நமக்காக செய்ததை ஞாபகப் படுத்திக் கொள்ள வேண்டும். அவர் நம்மில் மிகவும் அன்பு கூர்ந்ததால் தமது குமாரனை நமக்காக அளித்தார்.

குழந்தைகள் தாங்கள் தயாரித்த நாடகம், கவிதை, கேள்விகளை வழங்கலாம்.

தன் உண்மையில்லாத மனைவியை ஓசியா மன்னித்த கதையைக் கூறலாம் அல்லது நடிக்கலாம்.

தேவன் தங்கள் குடும்பங்களை எவ்வாறு மாற்றினார் என்பதையும், தங்கள் குடும்பத்துக்கு நடைமுறையில் சேவை செய்வதை எவ்வாறு கற்றுக்கொண்டார்கள் என்பதையும் குறித்து விசுவாசிகள் சாட்சி கொடுக்கட்டும்.

ஆலோசனை கூறவும், ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கவும், குடும்பத்தில் தினசரி ஜெபவேளைக்கு திட்டமிடவும் இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய குழுக்களை அமைக்கவும்.

எபே. 5:21 ஐ சேர்ந்த மனப்பாடம் செய்க.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net